**O.S.No.213/2011**

**நாள்:19.04.2022**

**வா.சா.2, பஞ்சநாதன்,**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை,**

1ம் பிரதிவாதி எனது அப்பா உடன் பிறந்தவர் என்றால் சரிதான். நான் வழக்கில் 4ம் வாதி என்றால் சரிதான். சின்ராஜ் அ.வ.எண்.105/2000 என்ற வழக்கை அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து கடந்த 28.07.2003 தீர்ப்பாணை பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு எனது அப்பா கோவிந்தசாமி மீதும், வட்டாட்சியர் பாப்பிரெட்டிப்பட்டி அவர்கள் மீதும், மாவட்ட ஆட்சியர், தருமபுரி மீதும் தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அரூரில் தாக்கல் செய்த வழக்கில் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் பட்டா கொடுக்க வேண்டும் என 1ம் பிரதிவாதிக்கு தீர்ப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பாச்சாறு கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு 15ஏக்கர் நிலம் உள்ளதா என்றால் இல்லை 9ஏக்கர் உள்ளது. தருமபுரி மாவட்டம், பே.தாதம்பட்டி கிராமத்தில் எங்களுக்கு 16ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.17/4, 17/5 ஆரம்பத்தில் புறம்போக்கு நிலமாக இருந்தது என்றால் சரிதான். அ.வ.எண்.105/2000 வழக்கில் 20வருடமாக எனது சித்தப்பா சின்ராஜ் அனுபவத்தில் உள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1986ம் வருடத்தில் Updating Registration Schemeல் எனது தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கூட்டுப்பட்டா கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. எனது தாத்தா வெங்கட்டன் பெயரில் பட்டா கொடுக்கப்பட இருந்ததில் அவர் பட்டா கொடுப்பதற்கு முன்பாக இறந்ததால் அவசியமில்லாமல் எனது தந்தை பெயரும் அதில் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. அதை வைத்து தான் தாவாவில் குறிப்பிட்டுள்ள தானசெட்டில்மென்ட் ஆவணத்தை என் தந்தை ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் எத்தனை பேர் மீது எழுதப்பட்டது என்றால் 6பேர் மேல் எழுதப்பட்டது. சாட்சி தற்போது 7பேர் மீது எழுதப்பட்டதாக கூறுகிறார். சொத்து 7பேருக்கும் பாத்தியம் என்று சொன்னால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தானசெட்டில்மென்ட் செல்லாது என வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அது தள்ளுபடி ஆகிவிட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தபோது அவசரஅவசரமாக எனது தந்தை மோசடியாக தானசெட்டில்மென்ட் ஆவணத்தை எழுதி வைத்து ஆர்.டி.ஓ. வட்டாட்சியர் விசாரணை செய்து பத்திரத்தை ரத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டுப்பட்டா யார் யார் பெயருக்கு உள்ளது என்றால் காசியம்மாள், ராஜசேகரி, சென்னம்மாள் பெயரில் உள்ளது. பிரதிவாதிகள் பெயரில் இல்லை. 7பேர் மீது உள்ள கூட்டுப்பட்டாவை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைக்கவில்லை. ஏனென்றால் அது தனிப்பட்ட சொத்து. ராஜசேகரி எனக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரியுள்ளார் என்றும், மற்றவர்களுக்கு பாத்தியம் இல்லை என்றும் சொன்னால் எனக்கு பாத்தியம் இல்லை. எனது அம்மா, தங்கை மற்றும் 3 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. எங்கள் தரப்பில் 03.01.2022 தேதியில் தாக்கல் செய்துள்ளதில் எனது வயது 55 என்று கூறியுள்ளேன். தற்போது 70வயது என சொல்லியுள்ளேன். எனது வயது 55என்பது தவறு

என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பெருமாளுக்கு வயது 52 என்று சொன்னால் சரிதான். 07.09.1962 தேதியில் 2ம் பிரதிவாதி எனது தகப்பனார் கோவிந்தசாமிக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் இல்லை. அப்போது பெருமாள் பிறக்கவில்லை. அ.வ.எண்.566/2008 வழக்கை 2ம் பிரதிவாதி பாப்பிரெட்டிப்பட்டி கிராமத்தில் உள்ள 6அயிட்டம் சொத்துக்களைம், திவருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கீழ்ப்பாச்சாறு கிராமத்தில் உள்ள 7அயிட்டம் சொத்துக்களையும், 20சமபாகங்களாக பிரித்து அதில் தனக்கு சேர வேண்டிய 20ல் 5பாகத்தை பிரித்துக்கொடுக்க 2ம் பிரதிவாதி பெருமாள் வழக்கு தொடர்ந்தார் என்றும், 30.04.2010ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், எனது வழக்கில் கோவிந்தசாமிக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்து என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது அவரது தனிப்பட்ட சம்பாத்திய சொத்து. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் பாகப்பிரிவினை ஏற்பட்டு அவர்கள் சொத்தை விற்பணை செய்து விட்டார்கள். பாகப்பிரிவினை பத்திரம் செய்தார்களா என்றால் பத்திரம் எழுதினார்கள். பாகப்பிரிவினை பத்திரத்தை ஏன் ஒப்படைக்கவில்லை என்றால் இனிமேல் ஒப்படைக்கிறேன். பாகப்பிரிவினை வாய்மொழியாகவோ, பத்திரமாகவோ ஏற்படவில்லை என்றும், அதை என்னால் ஒப்படைக்க இயலாது என்றால் சரியல்ல. அ.வஎண்.567/2008 20ல் 5பாகம் கேட்டதால் தான் தள்ளுபடி ஆனது என்றால் இல்லை சொத்தில் பெருமாளுக்கு உரிமை இல்லை என்பதால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது. அ.வ.எண்.567/2008 வழக்கில் ஒரு இடத்தில் கூட கோவிந்தசாமிக்கு பாத்தியம் இல்லை என்று கூறப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் 2,3 வாதிக்கும் தான் சட்டவிரோதமாக 01.08.2011ல் எனது தந்தை தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் இல்லை 6நபர்களுக்கு எழுதிவைத்தார். எனது தந்தை எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில்தான் உரிமை கோருகிறேன் என்றால் இல்லை. தாவா சொத்துக்களில் நான் எந்த காலத்திலும் சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது தங்கை தான் அனுபவித்து வருகிறார். நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கான கந்தாய ரசீதை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில வழக்கு நிலுவையில் உள்ளதால் ரசீது கொடுக்கவில்லை. தாவா சொத்திற்கான அடங்கல் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் ஒப்படைக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் கொடுக்கவில்லை. எனது முதன்மை வாக்குமூலத்தில் தானசெட்டில்மென்ட் தேதியிலிருந்து நாளது வரை தாவா சொத்தில் நாங்கள் தான் அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளது உண்மையா என்றால் உண்மைதான். பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் குடியிருக்கிறார்கள் என்றும், நீதிமன்றம் அதை உறுதி செய்துள்ளது என்றால் இல்லை பொய். பிரதிவாதிகள் தாவா சொத்தை குறைவான ஈன விலைக்கு கேட்டார்கள் என்றும், 02.09.2011தேதியில் தாவா சொத்தை அபகரிக்க முயன்றார்கள் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம்வாதி பெயருக்கு 2,3 வாதிகள் 09.09.2011தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதி வைத்தாக சொன்னால் இல்லை. முதலில் ராஜசேகரி பெயருக்கு பட்டா வாங்கினோம் என்றால் இல்லை. ராஜசேகரி, சென்னம்மாள், காசியம்மாள் பெயருக்கு கூட்டாக பட்டா வாங்கினோம். கூட்டு பாத்தியஸ்தர் எதிராக உறுத்துக்கட்டளை உத்தரவு பெற இயலாது என்றால் சரியல்ல. சின்னராஜ்

சென்னை உயர்நீதிமன்றத்தில் எனது தந்தை கோவிந்தசாமிக்கு எதிராக SA.741/2005 மற்றும் CMP.10433/2005 வழக்கில் 09.07.2005 தேதியில் இருப்பது இருக்கும்படி Status Co உத்தரவு பெறப்பட்டது என்றும், அதனடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனு முடிக்கப்பட்டது என்றும், நான் சொல்வதுபோல் பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி ஆகவில்லை என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்.17/4, 17/5 நிலங்கள் உட்பிரிவு செய்யப்பட்டு ந.க.எண்.36021ஆ2, தேதி.18.01.1994ன் படி புஞ்சை தரிசு நிலம் இலவச பட்டா வெங்கட்டன் பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் இல்லை. அது கிரயம். இலவச பட்டா வழங்கப்படுவதற்கு முன்பாக வெங்கட்டன் இறந்துவிட்டதால் எனது தந்தை கோவிந்தசாமி மற்றும் 1ம் பிரதவாதி பெயரில் கூட்டுப்பட்டா ந.எண்.24665பி4, நாள்.18.01.1994ல் கூட்டுப்பட்டா திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. அதனடிப்படையில் தான் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் 01.08.2011தேதியில் அரூர் சார்பதிவக ஆவண எண்.3101/2011 எழுதிக்கொடுத்தது சட்டவிரோதம் என்றும், பட்டா எண்.959 தாக்கல் செய்ப்பட்டு அது ரத்து செய்யப்பட்டது என்றும், அன்றிலிருந்து இன்றுவரை 1ம் பிரதிவாதி மற்றும் எனது தந்தை பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் இல்லை. எனது அம்மா மற்றும் தங்கை பெயரில் தான் கூட்டுப்பட்டா உள்ளது- அந்த விசாரணையிலேயே 1ம் வாதி தனது தந்தை உயிருடன் இருந்த வரை விவசாயம் செய்து வந்ததாகவும், அதன் பின்னிட்டு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டதாகவும் எனது தங்கை ஆர்.டி.ஓ. விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பே.தாதம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் 21.01.2019 தேதியில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் தற்சமயம் சின்னராஜ் என்பவர் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றும், கூட்டுப்பட்டாதாரரான கோவிந்தசாமி இறந்துவிட்டட நிலையில் அவரது வாரிசுகள் அனைவரும் வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக கொள்கிறேன் என சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தொடர்ந்த மே.மு.எண்.88/2003 30.09.2004ல் அனுமதிக்கப்பட்டு, அதனடிப்படையில் நாங்கள் நிறைவேற்று மனு 12வருடத்திற்குள் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும், 12வருடம் காலம் கழிந்து 6,7வருடம் கால தாமதமாக செயலுறுத்துக்கட்டளைக்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கீழ்ப்பாச்சாறு கிராமத்தில் தான் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றால் சரிதான். சொத்து இங்கு உள்ளது. நான் 1ம் வாதிக்கு உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். எனது அப்பா பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் கீழ்ப்பாச்சாறில் 16ஏக்கர் நிலத்தையும், பே.தாதம்பட்டியில் 15ஏக்கர் நிலத்தையும் அபகரித்துக்கொண்டு சின்னராஜை ஒரு ஆளுக்காரனை போன்று நடத்தி தாவா சொத்துக்களையும் விரோதத்தின் காரணமாக அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.